

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்ற வேட்பாளர் எம்.கே.விஷ்ணுபிரசாத் வெற்றிக்கு உழைத்திட்ட குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி கூட்டணி கட்சி நிர்வாகிகளை சந்தித்து நன்றி கூறும் நிகழ்ச்சி வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், நேற்று (13.06.2024 – வியாழக்கிழமை), காலை 10 மணியளவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. குறிஞ்சிப்பாடி ஒன்றியக் கழகச் செயலாளர் வி.சிவக்குமார் வரவேற்புரையாற்றினார். கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணுபிரசாத் தேர்தல் பணியாற்றிய கூட்டணி கட்சி நிர்வாகிகளை சந்தித்து, சால்வை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டார்.



விருதுநகர் வடக்கு மாவட்டம், சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் விருதுநகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், சேர்மன் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், வர்த்தகர் அணி மல்லாங்கிணறு போஸ், ரங்கராஜன், தொ.மு.ச. அண்ணாதுரை, பொதுக் குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், சுதாகர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, இளைஞர் அணி கிருஷ்ணகுமார், இலக்கிய அணி வை.மலைராஜன், சேர்மன் சுமதி ராஜசேகரன், மகளிர் அணி சுவேதா, வகிதா ரகுமான், ஒன்றியச் செயலாளர் ஆவுடையம்மாள், திருச்சுழி ஒன்றியச் செயலாளர் பொன்னுசாமி, துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், போக்குவரத்து துறை ராஜசெல்வம், நேஷனல் ராமர், எல்.திருமாறன், தலைவர் காசிராஜன், மரியராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஜுன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வீர்!

### கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் வேண்டுகோள்!



கடலூர், ஜுன் 14 -

வருகின்ற ஜுன் 15 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும்விழா

சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழி நடத்திச் சென்ற கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் - இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாண வரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி. வழக்கறிஞர் அணி விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில் நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு

# இலவச சிறப்புக் கல்வி - தசைப் பயிற்சி!

### மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, ஜுன் 14-

தமிழ்நாடு அரசு மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மூலம் சிறப்பு கல்வி, தசைப்பயிற்சி போன்றவை கட்டணம் ஏதும் இல்லாமல் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப்பள்ளிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 104 சிறப்புப்பள்ளிகள் விடுதியுடன் செயல்படுகின்றன. விடுதியில் தங்கி கல்வி பயிலும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு எவ்வித கட்டணமின்றி சிறப்பு ஆசிரியர்கள் மூலம் சிறப்பு கல்வி மற்றும் தசைப்பயிற்சியாளர் மூலம் தசைப்பயிற்சி போன்றவை வழங்கப்படுகின்றன.

இவை தவிர விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவ / மாணவியர்கள் உணவூட்டு மான்யமாக ரூ.1200 மாதம் ஒரு நபருக்கு வழங்கப்படுவதோடு இச்சிறப்பு பள்ளிகளில் உள்ள இரண்டு சிறப்பு ஆசிரியர்கள், ஒரு தசைப்பயிற்சியாளர் என மூன்று நபருக்கு ஊதிய மான்யம் வழங்கப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் விடுதியுடன் கூடிய மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரத்தில் செயல்பட்டு வருகின்றது.

இவை மட்டுமின்றி ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வாயிலாக 430 பகல் நேர பராமரிப்பு மையங்கள் தமிழ்நாடு முழுவதும் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தில் பணியாற்றும் சிறப்பு பயிற்றுநர்கள், தசைப்பயிற்சியாளர்கள் அங்கு வருகின்ற மனவளர்ச்சி குன்றிய மாணவ / மாணவியர்களுக்கு சிறப்புக்கல்வி, மறுவாழ்வு பயிற்சிகள் அளித்து வருகின்றனர். இவர்களைத் தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 சிறப்பு பயிற்றுனர்கள்,

1 தசைப்பயிற்சியாளர்களும் உள்ளனர். அவர்கள் அவ்வட்டாரத்தில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு சிறப்பு கல்வி, தசைப்பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றனர். பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு வீட்டிற்கு சென்று கல்வி, தசைப்பயிற்சி போன்றவற்றை வழங்குகின்றனர்.

இவை தவிர ஆரம்பகாலத்திலே இச்சிறப்பு குழந்தைகளை கண்டறிந்து பயிற்சி அளிக்கும் விதமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மனவளர்ச்சி குன்றியோர்களுக்கான ஆரம்ப கால பயிற்சி மையம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இம்மையங்களில் ஐந்து சிறப்பாசிரியர்கள் உள்ளனர்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி இல்லம் செயல்படுத்தப்படுகின்றது. இவ்வில்லத்திலும் 40 நபர்கள் வரை தங்கி பயன்பெறுகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 67 மனவளர்ச்சி குன்றியோ ருக்கான இல்லங்களில் உள்ள மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி, பயிற்சி போன்றவை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வில்லத்தினை நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஊதிய மான்யம், உணவூட்டு மான்யம், வாடகை மான்யம் மற்றும் சில்லரை செலவினம் போன்றவை வழங்கப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகளை மேற்கண்ட பள்ளிகள் / இல்லங்கள் / பயிற்சி மையங்களில் சேர்த்து கல்வி மற்றும் பயிற்சிகளை எவ்வித கட்டணமின்றி பெற்று பயனடையுமாறு மாற்றுத்திறனாளி கள் நல இயக்குநர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### கோவையில் மாபெரும் கழக முப்பெரும் விழா!

# மதுரை தெற்கு மாவட்டக் கழகத்தினர் அலைகடலெனத் திரண்டு வாரீர்!

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!



மதுரை, ஜுன் 14 -

நாடே வியக்கும் வகையில் வரும் 15ஆம் தேதி கோவையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் மாபெரும் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தினர் பெரும் திரளாக, அலை கடலென திரண்டு பங்கேற்குமாறு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாளை (15.06.2024 - சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மாபெரும் முப்பெரும் விழா பொதுக் கூட்டம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் இந்தியாவே போற்றும் வகையில் 40க்கு 40 என நாடாளுமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தேடித் தந்த பொது மக்களுக்கு நன்றி பாராட்டுதல், தேர்தல் வியூகம் மற்றும் மாபெரும் சாதனைக்காக அயராது பாடுபட்டு மக்கள் மனதில் சாதனை நாயகன் என புகழ்பெற்று வெற்றிக்கு பாடுபட்ட கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என மாபெரும் வரலாற்று சிறப்புமிக்க முப்பெரும் விழாவில் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் என அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு பங்கேற்று விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முல்லைப்பெரியாறு அணையில்

# ஒன்றிய கண்காணிப்புக்குழு ஆய்வு!

தேனி, ஜுன் 14 -

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ள கடந்த 2014ல் உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் அணையை கண்காணித்து பராமரிக்க ஒன்றிய நீர்வள ஆணைய தலைமைப் பொறியாளர் தலைமையில் கண்காணிப்புக் குழு அமைத்தது.

இக்குழுவின் தற்போதைய தலைவராக உள்ள ராகேஷ் காஷ்யப் தலைமையில், முல்லைப்பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகளாக உள்ள நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் சுப்பிரமணியன் மற்றும் கேரள அரசின் நீர்ப்பாசனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அசோக் குமார் சிங், நீர்ப்பாசனத் துறை முதன்மைப் பொறியாளர் பிரியேஷ் ஆகியோர் முல்லைப்பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, ஆலோசனைக் கூட்டம் நடத்தி ஆய்வறிக்கை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஒன்றிய கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.



நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. மேலப்பாளையம் பகுதிக் கழகம் சார்பில் மேலப்பாளையம் மண்டலம் அலுவலகம் முன்பு மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயம், பாளை பகுதிச் செயலாளர் அன்டன் செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்வில் அலிஃப் மீரான், வேங்கை வெங்கடேஷ், நத்தம் கந்தன், ஸ்டார் முருகன், எட்வர்ட் ஜான், காஜாமைதீன், ராபர்ட் செல்லையா, ராஜ், கேபிள் குமரேசன், கிங் பாலா, ஷெட்டி, சித்திக், மகாராஜன், எல்.ஐ.சி. பேச்சிமுத்து, கணேசன், சுப்ரித் சுப்பிரமணியன், பத்மா, செளந்தரம் முத்துராஜ், மேரி உலகராஜ், பிந்து செய்யது, ராஜேஸ்வரி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


ஐந்தாம் ஆண்டு

நினைவு அஞ்சலி





தோற்றம்
10.09.1937

மறைவு
14.06.2019

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்

முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

எஸ்.சிவசுப்ரமணியன் MA.,BL.,

வருத்தத்துடன்

— அரியலூர் மாவட்ட தி.மு.க —